St. Joseph’s Journal of Humanities and Science (Volume 3 Issue 1 January 2016) 58-61

St. Joseph's Journal of Humanities and Science
ISSN: 2347 - 5331

http://sjctnc.edu.in/6107-2/




# அன்னதானம்

- ச. ஆரோக்கியதாஸ் *

## முன்னுரை

தானத்தில் சிறந்தது அன்னதானம். சங்க காலத்தில், வருவோருக்கும் வந்து தங்குவோர்க்கும் அடியார் பெருமக்களுக்கும் தொண்டர் பெருமக்களுக்கும் அமுதளித்து விட்டு கடைசியாய் தாம் உணவு உண்பதை பெருமக்கள் விரதமாகக் கடைபிடித்தனர். இத்தகைய விரதத்தை மேற்கொண்ட பெருமக்கள் ஏராளம். இதில் பெண்களின் பங்கு என்று சொன்னால் அளவே இல்லை. நம் காரைக்கால் அம்மையார் அப்படியொரு அமுது படைத்து தம் அம்மை அப்பனாகிய சிவபெருமானுக்கே அம்மையாக திகழ்ந்தார்.

## உடல்

நமது உடல் அன்னமய கோசமானது என்பதால் இந்த உடலுக்கு 4 மணி நேரத்துக்குக் கண்டிப்பாக ஒரு முறை உணவு அளித்தே ஆக வேண்டும். அப்பொழுது தான் உடல் சித்தி பெரும் வெகு நாளைக்கு நிலைத்து நிற்கும். அது சரியாக இயங்கும். புத்தியும் வேலை செய்யும். சித்தம் கலங்காது, மேலும் கோபம் வராது, மயக்கம் வராது, சக்தியும் இருக்கும். ஆக இந்த உடலுக்குச் சத்து வேண்டும், சித்து வேண்டும். ஆனந்தம் வேண்டும். இவைகள் இருந்தால் தான் நாம் இறைநிலையை எட்டமுடியும். இறைநிலை என்பது சச்சிதானந்த நிலை. சச்சிதானந்த நிலையை அடைய நாம் நம் உடலை நன்கு பேணவேண்டும். வள்ளலாரும் இதைத்தான் கூறியிருக்கிறார், உடலைப் பொன்போல பார்த்துக்கொண்டால் தேகம் தானாகவே நிலை பெரும் என்கிறார்.

## பசிப்பிணி

பசியின் கொடுமை ஒரு மனிதனை எந்நிலையில் கொண்டு சென்று விடும் என்பதை சீத்தலைச்சாத்தனார் அவர்கள் கூறுகையில்,

“குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும் புணை விடூஉம்
நாண் அணி களையும் மாண் எழில் சிதைக்கும்
பூண் முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி அது தீர்த்தோர்”

* உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர்-1.
கைப்பேசி: 9842050546, மின்னஞ்சல்: peulascientific@gmail.com

என மணிமேகலைக் காப்பியத்தில் தீவதிலகை வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். அப்பசிப் பிணியைப் போக்கவே பிற்கால நாயன்மார்களும், வள்ளலார்களும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை மக்களுக்கு அறிவித்து இருக்கின்றார்கள்.

பசியினால் துன்பப்படுகின்றவர்கள் ஆகாரம் உண்டபின் அடைகின்ற இன்பம் மிக பெரிய இன்பமாகும். ஆகவே பசித்தவர்க்கு உணவு (ஆகாரம்) செய்துவித்தால் கடவுளின் சொரூப ரூபத்தை அவர்கள் அறியப்படுவார்கள். ஆகவே ஜீவகாருணிய இலட்சியம் பசியாற்றுவித்தல். அதை நமது கடமையாக கொள்ளுதல் வேண்டும்.

## அன்னதானம்

பசித்தோர் முகம் பார். அவர்களுக்கு உணவளி, அது எந்த நேரமாக இருந்தாலும் எந்த செயலில் ஈடுபட்டாலும், எந்த நிலையில் இருந்தாலும், நம் தரத்திற்கு தக்கபடி பசி என்று வருவோருக்கு உணவளிக்கவேண்டும். இதனால் நாம் ஆன்மலாபம் பெறமுடியும். முத்திக்கு வழிகிட்டும். இன்பம் அடையலாம்.

இதற்கு முதலில் எல்லோரையும் சகோதரர்களாக நினைக்க வேண்டும். எல்லா உயிர்களையும் நேசிக்க வேண்டும். ஏன் என்றால் எல்லா உயிர்களிலும் இறைவன் குடிகொண்டு உள்ளான் என்று நம்பப்படுவதே ஆகும். "எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி உள்ளே ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்....." "யாவரவர் உளம் தான் சுத்த சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமென நான் தெரிந்தேன்" என இராமலிங்க அடிகளார் சமய நோக்கின் மூலம் எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் என்னும் அறநெறியை வற்புறுத்தியிருக்கிறார்.

இறையருள் நம்முடன் இருக்க வேண்டுமானால் நாம் ஒவ்வொருவரும் இறைசித்தத்தோடு எப்பொழுதும் இணைந்தே இருக்க வேண்டும். மிக முக்கியமான தொழிலாகிய காத்தல் தொழிலை அவர் செய்யக்கூடியதை நீங்கள் செய்தீர்கள் ஆனால் நீங்கள் இறைமயமாக மாறலாம். இதற்கு முதலில் அன்னதானம் செய்யுங்கள். இதன் மூலம் பல்உயிர்களைக் காக்கக் கூடியவராகளாகி விடுவீர்கள். உங்களுக்கு வரும் சிக்கல்கள் தானாக சரியாகிவிடும் ஏனென்றால் பசித்தோருடைய தாக்கத்தை போக்கி அவர்களது உடலுக்கு தேவையான சக்தியை தருகின்றீர்கள். வயிற்றுப் பசிக்கான மருந்தாகிய அமுதத்தைக் கொடுக்கக் கொடுக்க ஆன்ம லாபமும் கிட்டும்.

நீங்கள் கோவிலுக்குப் போனால் அன்னதான உண்டியலில் ஒரு 10 ரூபாயாது போடுங்கள் அப்பொழுது தான் உங்களுக்கும் வயிற்று சோறு கிடைக்கும் என்பதை வாரியார் சொல்லியிருக்கிறார். உயிர்களுக்கு உணவளித்து உயர்ந்த மாபெரும் இறைதொண்டர்கள் நமது வரலாற்றில் உண்டு. அவர்களை இனி நினைவு கூறுவோம்.

## இளையான் குடி மாற நாயனார்

இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். மிகப்பெரிய செல்வந்தர். அவர் பிறர்க்கு உணவளிப்பதையே கடமையாகவும், விரதமாகவும் கொண்டதால் ஏழையாகியும் விட்டார். ஒரு நாள் சிவனடியார் ஒருவர் அவர் இல்லத்திற்கு வர அக்காலை நாயனாரிடம் விதை நெல்லைத் தவிர வேறொன்றுமில்லை. நல்ல மழை வேறு பெய்து கொண்டு இருந்தது. விறகுக்காக வீட்டின் உத்திரத்தை உடைத்து கறிக்காக வீட்டின் கொல்லைபுறத்தில் கிடைத்த கீரையைக் கொண்டு இறைவனுக்கு அமுதூட்டினார் என்று பெரியபுராணம் குறிப்பிடுகிறது.

மேற்கண்ட செய்தி மூலம் ஒரு கருத்தானது கேள்விக்குறியாக வெளிப்படுகிறது. விதை நெல்லை எடுத்து சமைத்து அமுது படைத்தாரே அந்த விதை நெல் இருந்தால் தானே அறுவடை செய்யமுடியும் என்று நினைக்க தோன்றுகிறது. இதற்கு வள்ளுவப் பெருந்தகை தக்கதொரு கருத்தினைக் கூறியிருக்கிறார். உங்கள் நிலத்திற்கு விதை நெல் ஊர்மக்கள் தருவார்கள். நிலத்திற்கு நெல் தானமாக கிடைக்கும்.

ஆனால், வயிற்றுப் பசியோடு தன்னை நாடி வந்த அடியவர் பசியை யார் போக்குவார். இத்தகைய செயல்களை சில தொண்டர்களால் தான் செய்ய முடியும். அது இளையான்குடி நாயனாரால் சாத்தியமாக்கப் பட்டிருக்கிறது. அதனால் தான் இன்று வரை சிவதொண்டருள் ஒருவராக இளையான் குடி நாயனார் போற்றப்பட்டு வருகிறார் எனலாம். இவரைப் போன்றே கலி கம்ப நாயனார் மற்றும் சிறுதொண்டர் நாயனார் முதலியோர் அடியார்களுக்கு அமுது படைத்து சிவப்பேறு பெற்றார்கள் என்பதை நினைவில் கொண்டு வரலாம்.

## சிறுதொண்டர் நாயனார்

சிறுதொண்டர் நாயனார் என்பவர் எப்பொழுதும் யாராவது ஒரு சிவனடியார்க்கு உணவளித்த பின்புதான் தானும் உணவருந்தும் பழக்கம் உடையவர். அந்த அளவுக்கு அவர் சிவபக்தியையும், சிவதொண்டையும் கடைப்பிடித்து வந்தார். ஒரு முறை அவருடைய தொண்டையும், சிவபக்தியையும் உலகுக்கு வெளிப்படுத்த அவரிடம் இறைவனே பிச்சைக்கு வந்தார். வந்தவர் சிவனடியார் அவருக்கு உணவளிக்க வேண்டும் என்பதை மட்டும் அவர் உணர்ந்தபோது, வந்த அடியாரோ சிறுதொண்டருக்கு ஒரு விண்ணபத்தை முன் வைத்தார். எனக்கு பிள்ளைக்கறி உணவு தான் வேண்டும். அதுவும் ஒரே பிள்ளையாக இருக்க வேண்டும். தாய் குழந்தையைப் பிடித்துக்கொள்ள வேண்டும். தந்தை அரிந்து அதை சமைத்துப் படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவர் கேட்டுக்கொண்டதின் பேரில் பிள்ளையை அவரும், அவரது மனைவியும் அரிந்து சமைத்து அடியாருக்கு விருந்து படைத்தார்கள். விருந்து சாப்பிட நீங்களும் அமருங்கள் என்று சிவனடியார் கேட்டுக்கொள்ள அதற்கு சிறுதொண்டர் சற்று தயங்கினார். எங்கே மகனை காணோம். அவனைக் கூப்பிடு என்ற போது சிவனடியார் பிள்ளைக் கறியையும் கேட்டு மகனையும் கூப்பிடச் சொல்கிறாரே என்ன செய்வது என்று தெரியாமல் கண்ணில் நீர் மல்க தன் மகனை "சிராளா" என்று அழைத்தார். சிராளன் சிவஒளி போல் ஓடோடி வந்தான். அவன் வந்ததும் அடியார் சிறுதொண்டரின் தொண்டையும் பக்தியையும் கண்டு பெருவாழ்வளித்து அருளி மறைந்தார் என்று சிவபுராணம் சொல்கிறது.

அடியாருக்கு தொண்டு செய்தால் அந்த இறைவனுக்கே தொண்டு செய்தது போல் ஆகும். அதுவே மகேஷ்வர பூஜை ஆகும். இதன் மூலம் வாழ்வில் நல்ல வளமும் நலமும் பெறலாம்.

## சொர்ண மழை

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தம் பிள்ளை தானாக வளரும்" என்பது பழமொழி ஒரு முறை ஆதிசங்கரர் பிச்சைக்குப் போன போது ஒரு நிகழ்வு நடந்தேறியது.

அவர் பிச்சைக்கு வந்து விட்டாரே என்னிடம் ஒன்றுமே இல்லை என்று ஒரு தாய் தன்னுடைய வறுமையையும் எண்ணாது ஏதாவது கொடுக்க வேண்டும் என்று தேடுகிறாள். இருந்ததோ ஒரு காய்ந்தும் வதங்கியும் இருந்த ஒரு நெல்லிக்கனி மனம் நொந்தாள். இறைவனை வேண்டினாள் இறைவா வருகின்றவருக்கு எவ்வளவு பசி இருக்கும் என்று எனக்குத்தெரியாது. ஆனால் என்னிடம் இதைத்தவிர கொடுப்பதற்கு வேறொன்றுமில்லையே என்று நெகிழ்ந்து கண்களில் நீர் பெருகியவளாக மனம் வெதும்பி என் செய்வேன் இறைவா இதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்று ஒரு பக்கம் நினைத்துப்பார்க்கிறாள். அதற்குள் சாமி இல்லத்தின் அருகில் வந்து விட்டார். அந்த ஏழை தாய் சாமியை மூன்று முறை வலம் வந்தாள் அவளிடம் இருக்கும் நெல்லிக்கனியை அவருடைய பாத்திரத்தில் சமர்ப்பித்தாள். சங்கரர் பார்த்தார், தாயை பார்த்தார், கட்டிருந்த ஆடையைப் பார்த்தார், கண்களைப் பார்த்தார், இல்லத்தையும் பார்த்தார். தரித்தரம் தாண்டவமாடியது என்பதை உணர்ந்தார். சற்றுநேரம் கண்ணை மூடினார். இறைவனை வேண்டினார். அன்னபூரணியை நினைத்தார். விஷ்ணுவை நினைத்தார். இறைவா இந்தப் பெண்மணியின் தரித்திரம் போக வேண்டும் என்று நினைத்து உள்ளம் உருகி லலிதா சகஸ்ராநாமத்தை சொன்னார் (உச்சரித்தார்கள்) அடுத்த வினாடியே அந்த தாயின் வறுமை விலகியது. அவள் வீட்டில் சொர்ண மழை பொழிந்தது இதுவே அன்னதானத்தின் மகிமை. எதைக்கொடுக்கிறோம் என்பதை விட எப்படிக்கொடுக்கிறோம் என்பதே முக்கியமானது.

## வள்ளலார்

"வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்"

என்று ஆன்ம உருக்கத்துடன் வாழும் உயிர்களுக்கு உணவு கிடைக்காமல் போய்விடுமோ என்றும் பஞ்சம் வந்தால் மக்களிடம் பசி என்னும் பாவி வந்து விடுவாளே என்று நினைத்து உருகிப்பாடி மழையை வருவித்தார் ஏன் என்றால் அவர் வள்ளல் அருளாளர்.

எல்லா உயிர்களும் இன்புற்று மரணமில்லா பெருவாழ்வில் வாழ வேண்டும் என்பதே வள்ளலாரின் நோக்கம். இதற்கு யாது செய்ய வேண்டும் என்றால் மற்ற உயிர்களுக்கு ஏற்படும் பயம் இடர் எல்லாம் களைந்து அவைகளை காத்து அருளுதல் வேண்டும். அவர் கூற்றுபடி பிறர்க்கு உதவி செய்து மகிழுங்கள் உங்களுக்கு இறையருள் கிடைக்கும்.

ஒரு சமயம், திருஞான சம்பந்தப்பெருமானும், திருநாவுக்கரசர் பெருமானும் திருவீழிமழலை என்னும் பதியில் தங்கியிருந்த போது அவ்வூரில் பெரும் பஞ்சம் ஏற்பட்டதால் அவ்விருவரும் சிவபெருமானிடம் படிக்காசு பெற்று அன்னதானம் செய்ததாக ஒரு செய்தி தெரிவிக்கிறது.

இவ்வாறு அன்னதானத்தின் பெருமையை இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம் பொதுவாக அன்னதானம் அளித்தால் அளிப்பவரும் பயன் பெறுவர். அதனைப் பெறுபவரும் பயன் பெறுவர் என்பது நடைமுறைச் செய்தி.

உலக வாழ்க்கையில் பதினாறு பேறுகளையும் பெற விரும்புவோர் எந்தத் தடை வந்தாலும் தொடர்ந்து அன்னதான விரதத்தை மேற்கொள்ள விழைய வேண்டும்.

"உடலுக்கு சோறு கொடுத்தாய் இறவைா நன்றி

உயிருக்கும் சோறு தருவாய்" என்று

சாப்பிடும் முன் வேண்டி எல்லோருக்கும் அழுது படைக்க வேண்டும்.

## முடிவுரை

அன்னதானத்தின் சிறப்பினை பசித்தவர்களுக்கு பசியாற்றுவிப்பதை விரதமாகக் கொண்ட ஜீவகாருணியமுள்ள சமுசாரிகளுக்கு கோடையில் வெயிலும் வருந்தாது. மண்ணும் சுடாது. இயற்கை துன்பங்களிலிருந்து அவர்கள் விடுபடுவார்கள். மற்றும் அவர் விளைநிலங்கள் வித்திடாமல் மேலும் மேலும் விளையும். வியாபாரத்தில் தடைவராது. லாபங்கள் அதிகரிக்கும். எப்படிப்பட்ட துன்பங்களும் துயரங்களும் சத்தியமாக வராது என்று வள்ளல் பெருமான் உரைத்திருக்கின்றார். அத்தகையோருக்கு மேலும் கல்வி, அறிவு, செல்வம் முதலியவை உண்டாகும். நீண்ட நாள் நோய்வாய்பட்டவர்களும் கூட சுகமாவார்கள் என்பது உண்மை. ஆகவே அன்னதானம் செய்வீர்.